StudentBounty.com

**A**

**7054**

Register Number

**Part III**

# விலங்கியல் / ZOOLOGY

( Tamil Version )

நேரம் : 3 மணி ] [ மொத்த மதிப்பெண்கள் : 150

## பகுதி - I

*குறிப்பு :* i) **அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

ii) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து விடைத்தாளில் எழுதுக.

30 × 1 = 30

1. உணவு உட்கொள்ளாத சமயத்தில் இரத்தத்தில் குளுக்கோசின் அளவு

அ) 70 முதல் 110 மி.கி./டெ.லி ஆ) 80 முதல் 200 மி.கி./டெ.லி

இ) 100 முதல் 150 மி.கி./டெ.லி ஈ) 200 முதல் 250 மி.கி./டெ.லி.

2. வைட்டமின் நயாசின் குறைவினால் ஏற்படும் நோய்

அ) இரத்த சோகை ஆ) ஸ்கர்வி

இ) பெல்லக்ரா ஈ) சிரோஸிஸ்.

3. தசையின் சுருக்கத்திற்குத் தேவையான கால்சியம் அயனிகளை வெளியிடுவது

அ) இரத்தம் ஆ) புரோட்டோபிளாசம்

இ) சினோவியல் படலம் ஈ) சார்கோபிளாஸ்மிக் வலை.

4. பெருமூளை புறணி செயலிழப்பு எந்நோயுடன் தொடர்புடையது ?

அ) அம்னீசியா ஆ) மையஸ்தீனியா கிரவிஸ்

இ) மூளை காய்ச்சல் ஈ) அல்ஸீமியர் நோய்.

www.StudentBounty.com
Homework Help & Pastpapers

StudentBounty.com



5. கண்ணின் குச்சி செல்களின் வெளிப்புறப் பகுதியில் காணப்படும் நிறமி

அ) புரத ஆப்சின் ஆ) ரொடாப்சின்

இ) ஃபோட்டாப்சின் ஈ) ஆப்சோனின்.

6. கிரேவின் நோயின் மறுபெயர்

அ) நீரிழிவு ஆ) தைரோடாக்ஸிகோசிஸ்

இ) கிரிட்டினிசம் ஈ) குள்ளத்தன்மை.

7. மூளையில் சுவாச கட்டுப்பாட்டு மையம் உள்ள பகுதி

அ) நுரையீரல் ஆ) முகுளம்

இ) சிறுமூளை ஈ) பெருமூளை.

8. யூரியா உயிரியல் உற்பத்தி நடைபெறும் இடம்

அ) கணையம் ஆ) கல்லீரல்

இ) மண்ணீரல் ஈ) சிறுநீரகம்.

9. விந்து செல்கள் சேமித்து வைக்கப்படும் பகுதி

அ) எபிடைடிமிஸ் ஆ) செமினல் பை

இ) விந்து நாளம் ஈ) புராஸ்டேட் சுரப்பி.

10. செவியினுள் மெழுகினைச் சுரப்பது

அ) புறச்சுரப்பி ஆ) பகுதிச் சுரப்பி

இ) வியர்வை சுரப்பி ஈ) செருமினஸ் சுரப்பி.

11. தைமஸ் சுரப்பியின் வளர்ச்சி காலம்

அ) 17 வருடங்கள் ஆ) 30 வருடங்கள்

இ) 12 வருடங்கள் ஈ) 5 வருடங்கள்.

www.StudentBounty.com
Homework Help & Pastpapers

12. இன்சுலின் ஊசி தேவைப்படுகிற சர்க்கரைவியாதி எதற்கு எடுத்துக்காட்டு ?

அ) ஹைப்பர் சென்சிட்டிவிட்டி  ஆ) அனாஃபைலாக்சிஸ்

இ) தடைகாப்புக் குறைவு நோய்கள்  ஈ) சுய தடைகாப்பு நோய்கள்.

13. பின்வருபவைகளில் எது உடலமைப்பு சார்ந்த தடை ?

அ) வெள்ளையணுக்கள்  ஆ) கோழைப்படலம்

இ) இன்டர்பெரான்  ஈ) தைமோசைட்டுகள்.

14. சுண்ணாம்பு நீருடன் வெல்லம் கலந்து கொடுப்பது எந்நோய்க்கான முதல் உதவி சிகிச்சை ?

அ) வயிற்றுப்போக்கு  ஆ) மலச்சிக்கல்

இ) பால்காய்ச்சல்  ஈ) ஆன்திராக்ஸ்.

15. கடல்பாசி உற்பத்தியில் எந்த நாடு முதலிடத்தை வகிக்கிறது ?

அ) சீனா  ஆ) இந்தியா

இ) இலங்கை  ஈ) பங்களாதேஷ்.

16. எவை நடமாடும் மரபுப் பொருள் எனப்படுகிறது ?

அ) பிளாஸ்மிட்கள்  ஆ) பைலி

இ) பார் உறுப்பு  ஈ) டிரான்ஸ்போசான்கள்.

17. *Y*-குரோமோசோம் ( கேரியோடைப்பிங் ) மனித குரோமோசோம் தொகுப்பில் எந்த தொகுதியில் அமைந்துள்ளது ?

அ) தொகுதி-*C*  ஆ) தொகுதி-*E*

இ) தொகுதி-*A*  ஈ) தொகுதி-*G*.



StudentBounty.com
www.StudentBounty.com
Homework Help & Pastpapers

18. புரோட்டியோமிக்ஸ் எனப்படும் புரத செய்தியியலில் அமினோ அமிலங்களின் வரிசையமைப்பை வாசிப்பது

அ) குளுக்கோ மீட்டர் ஆ) தெர்மாமீட்டர்

இ) சீகோனேட்டர் ஈ) ஹீமோசைட்டோ மீட்டர்.

19. வெப்ப காடுகளில் மரங்களின் மகரந்த சேர்க்கைக்கு முக்கியமாக பயன்படுவது

அ) மிமிக் விட்டில்கள் ஆ) ஆர்கிட் தேனீக்கள்

இ) ரைனோசிராஸ் வண்டுகள் ஈ) பாடும் பறவைகள்.

20. கீழ்க்காணும் பசு இனங்களில் எதனுடைய பாலில் அதிக கரோட்டின் சத்து காணப்படுகிறது ?

அ) சிந்தி இனம் ஆ) ஹரியானா இனம்

இ) கிர் இனம் ஈ) ஜெர்சி இனம்.

21. கீழ்க்காணும் கோழி இனங்களில் எது இந்தியாவில் மிகவும் புகழ்பெற்ற வர்த்தக ரீதியாலான இனமாகும் ?

அ) அசீல் ஆ) பஸ்ரா

இ) லெக்ஹார்ன் ஈ) சிட்டகாங்.

22. நொசிமா எனும் நோயுண்டாக்குவது

அ) பாக்டீரியா ஆ) புரோட்டோசோவா உயிரி

இ) பூஞ்சைகள் ஈ) வைரஸ்கள்.

23. உடல் சுற்று இரத்த சுழற்சியை துவக்கும் இரத்தக்குழாய் எது ?

அ) நுரையீரல் தமனி ஆ) நுரையீரல் சிரை

இ) பெருந்தமனி ஈ) மேற்பெருஞ்சிரை.

StudentBounty.com
www.StudentBounty.com
Homework Help & Pastpapers

StudentBounty.com



24. தேன் மருத்துவத்தில் உதவும் தேன் கூட்டுப் பொருள்

அ) புரோபோலிஸ் ஆ) ராயல் ஜெல்லி

இ) தேன் நச்சு ஈ) மகரந்தம்.

25. இரத்த வெள்ளையணுக்களை ( WBC ) கணக்கிடுவதற்கு பயன்படுத்தும் நீர்க்கும் திரவம்

அ) ஹேயம்ஸ் திரவம் ஆ) டர்க்ஸ் திரவம்

இ) இயோசின் திரவம் ஈ) போயின்ஸ் கரைசல்.

26. பல்லுருவமைப்பிற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டு

அ) திடீர் மாற்றம் ஆ) ஹண்டிங்டன் கொரியா

இ) SCID ஈ) கதிர்அரிவாள் இரத்தசோகை.

27. விலங்கியல் தத்துவம் என்ற நூலை வெளியிட்டவர்

அ) சார்லஸ் டார்வின் ஆ) ஆகஸ்ட் வீஸ்மேன்

இ) மெக்டூகல் ஈ) ஜீன் பாப்பிஸ்து லாமார்க்.

28. லார்வாக்களை உண்டு, காற்றை சுவாசிக்கும் மீன் இனம் எது ?

அ) கௌவுராமி ஆ) மோலி

இ) *சன்னா மொரூலியஸ்* ஈ) கத்திவால்.

29. தன் வாயில் கருவுற்ற முட்டைகளை வைத்து பாதுகாக்கும் மீன் எது ?

அ) திலேப்பியா ஆ) ரோகு

இ) பாம்ஃப்ரெட் ஈ) பிளாட்டி.

30. பின்வருபவைகளில் ஆர்.என்.ஏ. ஆன்கோஜெனிக் வைரஸ்

அ) சிமியன் வைரஸ் ஆ) பாலியோமா வைரஸ்

இ) அடினோ வைரஸ் ஈ) ரோவஸ் சார்கோமா.

www.StudentBounty.com
Homework Help & Pastpapers

StudentBounty.com



## பகுதி - II

*குறிப்பு :* எவையேனும் **பதினைந்து** வினாக்களுக்கு விடையளிக்கவும். $15 \times 3 = 45$

31. மராஸ்மஸ் என்றால் என்ன ? அதன் அறிகுறிகள் யாவை ?

32. குடல்வால் அழற்சி என்றால் என்ன ? அதன் அறிகுறிகள் யாவை ?

33. ஹெரிங்-புரூயர் அனிச்சை செயல் என்றால் என்ன ?

34. இதயத்தசை நசிவுறல் நோயின் தானறிகுறிகள் யாவை ?

35. இருபக்க உணர் இயக்கம் ( Lateralization ) என்றால் என்ன ?

36. கண் புரைக்கான ஏதேனும் மூன்று காரணங்கள் தருக.

37. கார்பஸ் லூட்டியம் என்றால் என்ன ?

38. நுண்ணுயிரியலில் லூயி பாஸ்டர் ஆற்றிய பங்கீடுகள் ஏதேனும் மூன்று கூறுக.

39. இம்யுனோ குளோபுலினின் படம் வரைந்து பாகங்களைக் குறி.

40. சூப்பர் பக்குகள் ( Super bugs ) என்பவை யாவை ? ஏதேனும் ஒரு பயனை குறிப்பிடுக.

41. குரோமோசோம் தொகுப்பு வரைபடத்தின் ( கேரியோடைப்பின் ) பயன்களை எழுதுக.

42. உயிரிய பல்வகைமை என்றால் என்ன ?

43. பரிணாமத்தின் அடிப்படைக் கருத்தினைப் பற்றிய மூன்று நூல்களைக் கூறுக.

44. கால்நடைகளைத் தாக்கும் வைரஸ் நோய்களை பட்டியலிடுக.

45. ராயல் ஜெல்லி என்பது யாது ?

46. பட்டுப்பூச்சி வளர்ப்பின் மூன்று நிலைகள் யாவை ?

47. CT யின் பயன்கள் மூன்று கூறுக.

48. பேணிக்காத்தல் என்றால் என்ன ?

49. ஹைப்போ ஃபிஸ்டேசன் என்றால் என்ன ?

50. விளையாட்டு மீன் வளர்ப்பு பற்றி நீ அறிவது யாது ?

www.StudentBounty.com
Homework Help & Pastpapers

## பகுதி - III

குறிப்பு : எவையேனும் **ஏழு** வினாக்களுக்கு மட்டும் விடையளி. அவற்றுள் **56** - வது வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்க வேண்டும். 7 × 5 = 35

51. வேர் குழல் சிகிச்சைப்பற்றி விளக்கம் தருக.

52. நினைவாற்றல் என்றால் என்ன ? அதன் வகைகளை விளக்குக.

53. HIV வைரஸின் உருவ அமைப்பை படத்துடன் விவரி.

54. வேதி சிகிச்சைக் காரணிகள் என்றால் என்ன ? வேதி சிகிச்சை காரணிகளின் பண்புகள் யாவை ?

55. கிராஃப்டின் பல்வேறு வகைகளை விவரி.

56. உயிரியப் பல்வகைமை இழப்பால் ஏற்படும் விளைவுகள் யாவை ?

57. மனித சமுதாயத்தின் வறுமையை போக்கும் பல்வேறு வழிகளைப் பற்றி எழுதுக.

58. சிவல்ரைட் விளைவு பற்றி விவரிக்கவும்.

59. கால்நடைகளில் செயற்கை கருத்தரித்தல் சிறு குறிப்பு எழுதுக.

60. தேன் மெழுகின் பயன்கள் பற்றி விவரி.

61. *மாக்ரோபிராக்கியம் ரோசன்பெர்ஜியின்* உயிரியல் மற்றும் முக்கிய பண்புகளை குறிப்பிடுக.

62. நீர் உயிரி வளர்ப்பின் நோக்கங்களை எழுதுக.

StudentBounty.com
www.StudentBounty.com
Homework Help & Pastpapers

StudentBounty.com



## பகுதி - IV

*குறிப்பு :* எவையேனும் **நான்கு** வினாக்களுக்கு விடையளிக்கவும். 4 × 10 = 40

63. இரத்தத்தின் இயைபினைப் பற்றி கட்டுரை வரைக.

64. அடினோ ஹைபோஃபைசிஸ் ஒரு நாளமில்லா சுரப்பியாக வேலை செய்யும் விதத்தை விளக்குக.

65. தேசிய குடும்ப நலத்திட்டத்தில் உள்ள பல்வேறு செயல் திட்டங்களையும் அவைகளின் முக்கியத்துவத்தையும் எழுதுக.

66. பாக்டீரியாக்களினால் மனிதரில் உண்டாகும் நோய்களை விவரி.

67. ஜீன் சிகிச்சை என்றால் என்ன ? அதன் வகைகளை விளக்குக.

68. நன்னீர் மேலாண்மை பற்றி விவரி.

69. எலக்ட்ரோ கார்டியோகிராம் ( ECG ) பற்றி ஒரு கட்டுரை வரைக.

70. ஏதேனும் ஐந்து நன்னீர் அலங்கார மீன்களைப் பற்றி எழுதுக.

www.StudentBounty.com
Homework Help & Pastpapers